DINAMANI

PAGE NO : 02

DATE : 01.10.2023

# மத்திய பல்கலை.யில் சர்வதேச கருத்தரங்கு

புதுச்சேரி, செப்.30: புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் தத்துவ இலக்கியம், வழிபாடு குறித்து நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன் கலந்து கொண்டார்.

பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை, சமூக அறிவியல், சர்வதேச ஆய்வுகள் பள்ளி, இந்திரா காந்தி தேசிய மையத்துடன் இணைந்து தாந்த்ரீக மதம், தத்துவம், இலக்கியம், வழிபாடு, கலை, வரலாறு என்னும் தலைப்பிலான சர்வதேச கருத்தரங்கை கலாசார மாநாட்டு மையத்தில் நடத்தியது.

நாடு முழுவதிலும் இருந்து 60 புகழ்பெற்ற அறிஞர்கள் பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தனர்.

வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் புதுவை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினார்.



கருத்தரங்கில் பேசுகிறார் புதுவை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன்.

தீபகற்ப இந்தியாவில் கடல் சார் வர்த்தகம் என்ற நூலின் முதல் பிரதியையும், புதுச்சேரி ஐ.ஜி.என்.சி.ஏ.வின் மண்டல இயக்குநர் ஜே. கோபாலின் ஓவியத் தொகுப்பையும் துணைநிலை ஆளுநர் வெளியிட்டார். கருத்தரங்கில் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் சார்பிலான கலைக் கண்காட்சி இடம் பெற்றது.

கல்விக் கலந்தாய்வைத் தொடர்ந்து கலாசார நடனங்களும் நடைபெற்றன.